I would like to mention at this juncture that one journalist in Tamil Nadu was sentenced to undergo three months imprisonment by the Supreme Court and was also ordered to go to every Judge's house and apologise before entering the jail to serve the sentence. I request these to be construed as precedents and followed as precedents.

Nobody has a right to mar the reputation of M.L.As. and Ministers. I would like to mention that the recently-started certain weeklies and magazines are prone to these libellous gutter publications and tend to lower the reputation of the Dailies and Journals with long heritage like 'Ananda Vikatan'. That is all.

### 3. கவன ஈர்ப்பு

### (அ) பாலக்கோடு மருத்துவமனைக் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்.

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு தொகுதி, பாலக்கோட்டிலுள்ள அரசு மருத்துவமனை, சுகாதாரக் கேடுகளுடனும், பழுதடைந்த நிலையிலும் உள்ளதால் பொது மக்கள் சுகாதார வசதி பெற முடியாத நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அரசு மருத்துவமனை பழைய கட்டிடத்தில் இயங்கினாலும், எவ்வித சுகாதாரக் குறையுமின்றி இயங்கிவருகிறது. இம்மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்குத் தேவைப்படும் மருந்துகள் போதுமான

[திரு. ப. உ. சண்முகம்] [1987 மார்ச் 28

அளவில் இருப்பில் உள்ளன. அனைத்துப் பணியாளர்களும் பணியிலுள்ளனர். அங்கு 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மட்டும் சிகிச்சை பெற்றோர் விபரம் வருமாறு :—

| | |
|---|---|
| (1) வெளிநோயாளிகள் | 4124 |
| (2) உள்நோயாளிகள் | 272 |
| (3) மெடிகோலீகல் | 40 |
| (4) பிணப்பரிசோதனை எண்ணிக்கை | 30 |
| (5) பெரிய அறுவை சிகிச்சை | 2 |
| (6) சிறிய அறுவை சிகிச்சை | 20 |
| (7) மகப்பேறு எண்ணிக்கை | 24 |

எனவே பால்க்கோடு அரசு மருத்துவமனை நல்லமுறையில் இயங்கிவருகிறது. பழைய கட்டிடத்தில் சில பழுதுகள் உள்ளன. அப்பழுதுகளைக் களைய ரூ. 64,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் வசம் சிறு வேலைத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப் பட்ட நிதி தீர்ந்துவிட்டதால் இம்மதிப்பீடுகளை அரசின் ஒப்புதல் பெறவேண்டி அனுப்பப்பட உள்ளது. உறுப்பினர் குறிப்பிட்டது போலல்லாமல் பொதுமக்களுக்கு தேவைப்பட்ட மருத்துவவசதி, இன்னல் ஏதும் இன்றி, இம்மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே உண்மைக்குப் புறம்பான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, அங்கே பிணப் பரிசோதனை எண்ணிக்கை இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மட்டும் 30 என்று கூட தவறான தகவலைக் கொடுத் திருக்கிறார்கள். அதைப்போல்தான் இந்த அறிக்கையும் இருந்து கொண்டிருக்கிறது. 1985—பட்ஜெட் கூட்டத் தொடரில் இந்த கவன ஈர்ப்பை நான் கொடுத்திருந்தேன். 1985 ஆம் ஆண்டு கூட்டத்தொடரில் இதே கவன ஈர்ப்பைக் கொடுத்தபோது, அன்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் அதற்கு பதில் அளிக்கும்போது பொதுப்பணித் துறையின் மூலமாக ரூபாய் 75,000 ஒதுக்கீடு

1987 மார்ச் 28] [திரு. ப. தீர்த்தராமன்]

செய்யப்பட்டு, அந்தக் கட்டிடத்தைப் பழுது பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள். இரண்டாண்டுகள் ஆகியும் அது செய்யப்படவில்லை. பன்னெடுங்காலத்திற்கு முன்பாகக் கட்டப்பட்ட அக்கட்டிடம் பழுதடைந்து மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. கழிவறை மிக மோசமாக இருக்கிறது. சாக்கடை நீர் வெளியேறாமல் மிகவும் நாற்றம் அடிக்கிற நிலையிலே அந்த இடம் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால், அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிறேன். அதை மறுபரிசீலனை செய்து, நல்ல கட்டிடமாக அதைச் சீர்படுத்திட முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, அந்த மருத்துவ மனைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு தயார் நிலையிலே வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு அதனை எடுத்து ஒரு நல்ல கட்டிடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அரசு அறியும். பழுதுபட்டிருக்கிற கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கு இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

## (ஆ) அனுமதியின்றித் தொடங்கப்பட்ட கிள்ளியூர் அன்னை வேளாங்கன்னி கல்லூரி மாணவர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ், திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், எஸ். ரெத்தினராஜ், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர், அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டம், கிள்ளியூர் பகுதியில், 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அன்னை வேளாங்கன்னி கல்லூரியில் பயிலும் மாணவர்கள் 121 பேர் தேர்வு எழுத முடியாது பாதிக்கப்பட்டிருக்கும் நிலை